# ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான செயற்றிட்டம்

மே.கபேசன்[1*], இ.குபேசன்[2]

**அறிமுகம்**

மனித இனம் தோன்றி அவற்றின் பரிணாமவளர்ச்சி காரணமாக அறிவு விருத்தியடையத் தொடங்கியது. இவ்அறிவு விருத்தியானது ஆரம்பகாலங்களில் ஒலிகளாகவும், குறியீடுகளாகவும் பரிமாறப்பட்ட போதும் பிற்காலத்தில் அவை எழுத்து வழக்கிற்கு மாற்றமடைந்தன. இவ் எழுத்து வழக்கின் வளர்ச்சியும் மனிதவிருத்தியுடன் தொடர்புபட்டதாகவே இருந்து வந்துள்ளது. ஆரம்பகாலங்களில் மனிதன் தனது அறிவைப் பரப்புவதற்கு எழுத்து ஊடகமாகக் கற்பாறைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட களிமண் தகடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தினாலும் காகிதங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட புற்களையும், ஓலைச்சுவடிகளையும் அறிவை பரப்புவதற்கான ஊடகமாக மனிதன் பயன்படுத்தினான். பெறுமதிமிக்க தகவல் வளங்களாகவும், வரலாறு மற்றும் கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கிய வகையிலும் மனித அறிவின் ஆழத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக ஓலைச்சுவடிகளின் தொகுப்பு காணப்படுகின்றது. (Nishanthi & Wijayasundara, 2022). இவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஓலைச்சுவடிகள் இலங்கையில் தற்போதுவரை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களிடையே முறையான வகையிலும் முறைசார்பற்ற வகையிலும் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர் போன்றவர்களால் சுவடிகள் பலவும் நூல்களாக பதிப்பிக்கப்பட்டபோதும் எண்ணற்ற சுவடிகள் இன்றுவரை முறையாகப் பதிப்பிக்கப்படாமல் சுவடிகளாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

மேற்படி சுவடிகளைப் பாதுகாத்து, பராமரித்து, அவற்றில் உள்ள விடயதானங்களை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்தவகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தில் சுமார் 207 ஏட்டுச்சுவடிகள் (24,607 தனித்தனி ஓலைகளைக் கொண்டது) சேகரிக்கப்பட்டு, பாதுகாத்து, பராமரிக்கப்படுகின்றன. இச்சேகரிப்பில் சித்தவைத்தியம், சோதிடம், இலக்கியம், விலங்கு வைத்தியம், வரலாறு, மொழி போன்ற பல விடயப்பரப்புக்கள் சார்ந்த சுவடிகள் காணப்படுகின்றன. இச்சுவடிகளை எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து அனைவரும் பயன்படுத்தக்கூடியதாக மாற்றுவதை பிரதான நோக்கமாகக் கொண்டதாக சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் நம்பிக்கை நிதியத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டம் காணப்படுகின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

இச்செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் அனுமதி பெறப்பட்டது. நூலகத்தில் பாதுகாத்து பராமரிக்கப்படுகின்ற சுவடிகளை தொற்றுநீக்கி, எழுத்துக்கள் தெளிவாக்கப்பட்டு, சுவடிகளை எண்ணிமப்படுத்தலுக்கு தயார்படுத்துவது இச்செயற்றிட்டத்தின் முதற்படியாகும். இவ்வாறு தயார்படுத்தப்பட்ட சுவடிகளை மின்வருடியைப் பயன்படுத்தி PDF கோப்புகளாக இலத்திரனியல்

[1*] *Corresponding author:* மே.கபேசன், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
Email: menusham01@gmail.com

[2] நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வடிவத்திற்கு மாற்றுதல், பிரதியாக்கம் செய்யப்பட்ட சுவடிகளை ஓலைச்சுவடி வாசிப்பாளனின் உதவியுடன் வாசித்து அறிதல், எழுத்து வடிவத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட சுவடியின் பிரதிகளை மூலச்சுவடியை வைத்து செவ்வைபார்த்தல், செவ்வை பார்க்கப்பட்ட பிரதிகளை அச்சிடுதல், பிரதியாக்கம் செய்யப்படுகின்ற ஓலைச்சுவடிப் பிரதிகளை முகாமைத்துவம் செய்து வாசகர்கள் அணுகுவதற்காக (DSpace Library Content Management System) எனும் உள்ளடக்க முகாமைத்துவ முறைமை மூலம் தகவல் பரவலாக்கம் செய்தல் என்பன தொடர்ச்சியான செயற்பாடுகள் ஆகும்.

**செயற்திட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளில் மேற்கூறப்பட்ட செயன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுத் தற்போது நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சுவடிகள் எண்ணிமப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், 'முதலியார் கல்வெட்டு' எனும் ஓலைச்சுவடியானது (21 ஓலைகளைக் கொண்டது) தற்போது வழக்கில் உள்ள எழுத்துக்களாக மாற்றியமைக்கப்பட்டுச் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த நடவடிக்கையான அச்சு வடிவில் வெளியீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்தும் இச்செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் வாசகர்களால் பயன்படுத்தப்படாமல் உள்ள சுவடிகளைப் பராமரித்தல், எண்ணிமப்படுத்தி வாசகர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. கூடியதாக உள்ளது. இதன் மூலம் முன்னோர்களின் கலாசாரம், வைத்திய முறைகள், மிருகவைத்திய முறைகள், சோதிட மரபுகள் போன்ற விடயங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிப்பதற்கான சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்துடன் தொடர்புடைய வெளிப்பிரதேசங்களில் உள்ள ஓலைச்சுவடிகளையும் தேடிப்பெற்று தேர்ந்தெடுத்து இச்செயற்றிட்டத்தின் மூலம் பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற வேறு நிதி உதவிகள் கிடைக்கப்பெற்றால் ஓலைச்சுவடிகளுக்கெனத் தனியானதொரு பிரிவினை அமைக்க நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும். தற்காலத்தில் இவற்றினை வாசித்து அவற்றின் விடயதானங்களை வெளிக் கொண்டுவருவதற்கு வாசிப்பாளர்கள் அரிதாக காணப்படுகின்றனர். எனவே ஓலைச்சுவடிகளை வாசிப்பதற்கும் அது தொடர்பான கையாளுகை திறன்களை வளர்த்துக்கொள்ளுதல் அடுத்த தலைமுறையினரை ஊக்குவிக்க வேண்டும். ஓலைச்சுவடிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் ஊக்கப்படுத்த வேண்டும். ஓலைச்சுவடிகளின் நீண்டகால பாவனைக்காக சுவடிகளை பாதுகாப்பதற்காக ஆய்வு கூடங்களை நிறுவி, நமது முன்னோர்களின் அறிவுச் செல்வத்தினை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** ஆவணப்பாதுகாப்பு, ஆவணப்பராமரிப்பு, ஓலைச்சுவடி, எண்ணிமப்படுத்தல்

**உசாத்துணை**

Nishanthi, M., Kumara, H.U.C.S., & Konpola, K.W.A.M. (2023). Research conception of Palm Leaf manuscript conservation: Bibliometric analysis of Scopus database. *International Journal of Multidisciplinary Studies,* 10(2), 13-28.

Nishanthi, M. & Wijayasundara, N.D. (2022). Preservation and Conservation of Palm Leaf Manuscripts at the Library of University of Sri Jayewardenepura. *Vidyodaya Journal of Humanities and Social Sciences*, 7(02).